# தொல்காப்பிய உரையாசிரியர்களும் அகப்பாட்டு உருவமைப்புக் கூறுகளும்

A Perspective on Tolkāppiyam commentators and the structural elements in Akam poetry

ப. ஷங்கரி[1], முனைவர் பா.ஜெய்கணேஷ்[2]

[1]முனைவர் பட்டஆய்வாளர், பதிவு.எண்- RC2433004011001, தமிழ்த்துறை, அறிவியல் மற்றும் கலையியல் கல்லூரி, எஸ்.ஆர்.எம் அறிவியல் மற்றும் தொழில்நுட்பவியல் கல்வி நிறுவனம், காட்டாங்குளத்தூர்வளாகம், செங்கல்பட்டு- 603 203, தமிழ்நாடு, இந்தியா.

[2]ஆய்வு நெறியாளர், இணைப்பேராசிரியர், தமிழ்த்துறை, அறிவியல் மற்றும் கலையியல் கல்லூரி, எஸ்.ஆர்.எம் அறிவியல் மற்றும் தொழில் நுட்பவியல் கல்விநிறுவனம், காட்டாங்குளத்தூர்வளாகம், செங்கல்பட்டு- 603 203, தமிழ்நாடு, இந்தியா.

**ஆய்வுச்சுருக்கம்**

உலகில் உள்ள காட்சிப்பொருள், கருத்துப் பொருள்களை வகைபடுத்தி மூவகையாக முதற்பொருள், கருப்பொருள், உரிப்பொருள் எனவாழ்க்கை முறையினை உரைப்பது பொருள் இலக்கணம். தொல்காப்பியர்தம் நூலில் இவற்றைப் பற்றிவிரித் துரைத்துள்ளார். பல்வேறு அரசியல் மற்றும் இலக்கணமரபு மாற்றங்களுக்குப்பின் உரையாசியர்கள் விளக்கம் கூறுகின்றனர். அதனால், உரையாசிரியர்கள் தொல்காப்பியரின் காலநிலைமையை நன்கு உணரும்வாய்ப்பினைத்தம் காலத்துப் பெற்றவர்கள் அல்லர். தொல்காப்பியத்திற்கு உரைஎழுதிய ஆசிரியர்களுள் காலத்தால் முற்பட்டவர் இளம்பூரணர். இவர்காலத்தில் வழங்கியமரபுகளைக் கருத்தில் கொண்டு பொருள் என்பதற்கு முதல், கரு, உரிஎன்கிறார். நச்சினார்க்கினியர் தண்டியலங்காரத்திற்கு பின் இயற்றியதனால் பொருள் என்பதற்கு அறம், பொருள், இன்பம், வீடு என்றுரைத்து அவற்றின் உட்பொருளாகக் கூறுவதன் வழி மாற்றத்தினை அறியலாம். உரையில் முதற் பொருளில் முதன்மை பெறும் நிலப்பகுதியின் பெயர்களுக்கு விளக்கம் தரும் போது குறிப்பிட்ட நிலத்தில் தோன்றும் மலர்களின் பெயரால் நிலத்திற்கும் பின்பே ஒழுக்கமானது என்றும் நச்சினார்க்கினியர் ஒழுக்கத்தினை முதன்மை படுத்து வதற்கானகாரணம் அறத்தினை முதலில் கொண்டேதன் உரையினைவடிவமைத் திருப்பதனை அறியலாம். இவ்வாறாக உரையாசிரியர்களின் வழிமுப்பொருள்களின் தேவைகளையும் அவர் தம் தேடல்களையும் இக்கட்டுரையில் ஆராயப்பட்டுள்ளது.

**குறிப்புச்சொற்கள்:** தொல்காப்பியர், உரையாசியர்கள், முப்பொருள்கள், தேவைகள், தேடல்கள்.

**முன்னுரை**

தமிழில் நமக்குக் கிடைத்துள்ள முதன்மையான இலக்கணநூல் தொல்காப்பியம் ஆகும். இம் மூல நூல்தோன்றி ஏறக்குறைய ஒன்பது நூற்றாண்டுகளுக்குப் பின்னரேஉரைகள் தோன்றியுள்ளன. இதனால் தொல்காப்பியர்கால மொழி அமைப்பும்உரையாசிரியர்களின்காலமொழிஅமைப்பும்



© 2026, IRJTSR

வேறுபாடுகள்நிறைந்திருப்பதனைக்காணலாம். காலப்போக்கில்மொழிவளர்ச்சியால்நிகழ்ந்த மாற்றங்களைஉரையாசிரியர்கள் உணராமல்இல்லை. இந்தவகையில் உரைகள்தொல்காப்பியத்தைப்புரிந்து கொள்ளப்பயன்படுவதோடு அல்லாமல்உரையாசிரியர்கள்காலமொழி அமைப்பினைவிளக்கும் இலக்கணமாகவும்மொழிவரலாற்றினை அறியத்துணைபுரிவனவாகவும்விளங்குகின்றன. அந்தவகையில், தொல்காப்பியர் கூறியமுப்பொருள்கள்காலமாற்றத்திலும் பிற்காலப்பொருளிலக்கணநூல்களிலும் பயின்றுவந்திருப்பதனைக்காணலாம். இதன்மூலம்தமிழ் இலக்கணத்தில் அவற்றின்தேவையினை அறியமுடிகிறது. இருப்பினும் உரையாசிரியர்கள் தத்தம்காலமரபினைகூறினாரேயன்றித் தொல்காப்பியர்வழிநின்றுகூறவில்லை என்பதும்அவர்தம்முரண்பாடுகளின் வழியேபொருள் தெளிவின்மையினைக்காணலாம்.

**முப்பொருளும்முறைவைப்பும்**

பழந்தமிழரின்வாழ்க்கைமுறை அடிப்படையில் இயற்கையோடு இணைந்தஒன்றாகக்கொள்ளலாம். மக்கள்சமூகத்தின்கருத்துக்கள்அவர்தம்கால இலக்கியக்கியங்களின்வழிபிரதிபலித்துக் கொண்டிருக்கிறது. பொருளதிகாரத்தின் இயல்விளக்கத்தின்போது இளம்பூரணர்உரையில்,

**பொருள்என்பதுயாதோஎனின், மேற்சொல்லப்பட்ட சொல்லின் உணரப்படுவது. அது, முதல்கருஉரிப்பொருள்எனமூவகைப்படும்.**

ஆனால்நச்சினார்க்கினியர்தம்உரையில்,

**பொருளாவன: - அறம்பொருளின்பமும், அவற்றதுநிலையின்மையும், அவற்றினீங்கியவீடுபேறுமாம். பொருளெனப்பொதுப்படக்கூறவே, அவற்றின்பகுதியாகியமுதல்கருஉரியும், காட்சிப்பொருளும், கருத்துப்பொருளும்அவற்றின்பகுதியாகியஐம்பெரும்பூதமும்அவற்றின்பகுதியாகியஇயங்குதிணையும்நிலைத்திணையும், பிறவும்பொருளாம்.**

எனக்குறிப்பிடுகிறார்.

அகத்திணையியலில்தொல்காப்பியர்முப்பொருள்பற்றிப்பின்வருமாறுகூறுவதைக்காணலாம்.

**“முதல்கருவுரிப்பொருள்என்றமூன்றே**

**நுவலுங்காலைமுறைசிறந்தனவே**

**பாடலுட்பயின்றவைநாடுங்காலை”**

**(அக -03)**

இந்நூற்பாவிற்குஉரையியற்றியபழையஉரையாசிரியர்களானஇளம்பூரணர்நேரடியாகமுப்பொருளினைக் கூறநச்சினார்க்கினியர்நான்குஉறுதிப்பொருள்களைமுதன்மைப்படுத்திஅதன்பகுதியாகமுப்பொருளினை சுட்டுவதுகாணதக்கது. இவற்றின்மூலம்நச்சினார்க்கினியரின்காலம் கி.பி.14ம்

நூற்றாண்டின்பிற்பகுதிஎனமு.வைஅரவிந்தன்அவர்களின்கருத்தாகும்.
தண்டியலங்காரம்என்றவடமொழிசார்ந்துஇயற்றப்பட்டநூலின்காலம் கி.பி.12ம் நூற்றாண்டுஎன்பர். இவருக்குப்பின்வந்தஉரையாசிரியரானநச்சினார்க்கினியர்இலக்கியஇலக்கணங்களுக்குஉரைஇயற்றயவ ராகையால்இதனைக்கருத்தில்கொண்டுநோக்கின்அவர்தம்காலமரபுவெளிப்படுவதைக்காணலாம்.

**“நாற்பொருள்பயக்கும்நடைநெறித்துஆகித்”**

**(தண்டி-07)**

**“அறமுதல்நான்கினும்குறைபாடுஉடையது”**

**(தண்டி-09)**

இதனைஅடிப்படையாகக்கொண்டேமுப்பொருளினைவிளக்கும்போதுஇளம்பூரணரும்நச்சினார்க்கினியரு ம்வேறுப்படுகின்றனர்.
தொல்காப்பியம்உலகவழக்கினையும்செய்யுள்வழக்கினையும்அடிப்படையாகக்கொண்டுஇயற்றப்பட்டநூ லாகச்சிறப்புபாயிரத்தினைஎழுதியபனம்பாரனார்கூறுவதனைக்காணலாம்.
ஆகையினால்செய்யுளில்சான்றோர்கள்முதற்பொருள்கருப்பொருள்உரிப்பொருள்என்றமூன்றுபொருளி னையும்அமைத்துஇயற்றினால்அதனைச்சிறந்ததாகக்கொள்ளப்படும்.
அகப்பாடல்களுக்குமட்டுமின்றிப்புறப்பாடல்களுக்கும்உரியதாகமுப்பொருளும்திகழ்கின்றது.
இடம்பெற்றிருக்கின்றமுறையினாலேயேசெய்யுளுக்கானதிணையானதுவகுக்கப்படும்.நச்சினார்க்கினியர் முதற்பொருளினைக்குறிப்பிடும்போதுநிலத்தினையும்பொழுதினையும்இயற்கைஎனவும்செயற்கைநிலனு ஞ்செயற்கைப்பொழுதும்என்றும்கூறுகிறார்.
பொழுதில்செயற்கைப்பொழுதுஇல்லைஎன்பதுஆ.சிவலிங்கனார்அவர்களின்கூற்றாகும்.
ஆனால்நச்சினார்க்கினியர்முன்பே**புனைந்துரைவகையாற்கூறும்நாடகவிலக்கணம்போல**என்றுபெரும் பான்மையாகநாடகவழக்கிலும்சிறுபான்மையாகஉலகியல்வழக்கிலும்நிகழும்என்பதனை**யாதானுமொ ரேவழிஒருசாரார்மாட்டுஉலகியலான்நிகழும்**என்றுஅவர்தம்உரையின்மூலம்பெறப்படுவதால்செயற்கை பொழுதுஎன்றுசுட்டியிருப்பதுநாடகத்திற்கானதேஎன்றுஅறிவதனால்செயற்கைபொழுதுஎன்பதுஉண்டுஎ ன்பதைஉணரலாம்.முதற்பொருளில்நிலத்தைப்பற்றித்தொல்காப்பியர்கூறுகையில்சொல்லியமுறையாற் சொல்லவும்என்றுகூறியதுஐயத்திற்குஇடமாக்கியது.

**முல்லைகுறிஞ்சிமருதம்நெய்தல்எனச்**

**சொல்லியமுறையாற்சொல்லவும்படுமே**

**(அக-05)**

இதற்குஇளம்பூரணர்பொருள்கொள்ளுகையில்,

**எதிர்மறையாகலான்இம்முறையன்றிப்பிறவாய்ப்பாட்டாற்சொல்லவும்படும்என்றவாறு …………..அவற்றுள்யாதானும்ஒன்றைமுன்னும் பின்னுமாக வைத்துக் கூறுதல். அது சான்றோர் செய்யுட் கோவையினும் பிற நூலகத்துங் கண்டு கொள்க.**

என்றும்நிலத்திற்கானமுறைவைப்பானதுமுல்லை, குறிஞ்சி, மருதம், நெய்தல்என்றஇம்முறைஇலக்கியங்களில்மாற்றம்அடைந்துள்ளதனைக்காணலாம்என்றுகூறிஅதற்கான தொருகாரணத்தினைக்குறிப்பிடுகிறார். ஆனால்நச்சினார்க்கினியர்,

**முல்லை, குறிஞ்சி, மருதம்நெய்தல்என்றமுறையென்னை, யெனின், இவ்வொழுக்கமெல்லாம்இல்லறம்பற்றியஒழுக்கமாதலின், கற்பொடுபொருந்திக்கணவன்சொற்பிழையாதுஇல்லிருந்துநல்லறஞ்செய்தல்மகளிரதுஇயற்கைமுல்லையாதலின்அதுமுற்கூறப்பட்டது. புணர்தலின்றிஇல்லறம்நிகழாமையிற்புணர்தற்பொருட்டாகியகுறிஞ்சியைஅதன்பின்வைத்தார். புணர்ச்சியின்பின்ஊடல்நிகழ்தலின்அதன்பின்மருதத்தைவைத்தார். பரத்தையிற்பிரிவுபோலப்பிரிவொப்புமைநோக்கிநெய்தலைஈற்றின்கண்வைத்தார்.**

மேற்குறித்தவாறுதொல்காப்பியர்கூறியநிலங்களின்அடிப்படையில்உரிப்பொருள்களைஒப்பிட்டுஉரைப்பதன்மூலம்மாற்றமடைந்தமரபுகளில்இருந்துமூலநூலின்பொருத்தப்பாட்டினைக்கூறியவதன்வழிஉரையாசிரியர்களின்தனித்துவம்வெளிப்படுவதனைஉணரலாம்.

இவையன்றிச்சிறப்புப்பாயிரக்கூற்றினைத்தொல்காப்பியர்கருத்தாகவேகொள்ளுவதுஉரையாசிரியர்மரபு. அந்நிலைகொண்டுநோக்கின்,

**வடவேங்கடந்தென்குமரி**

**ஆயிடைத்**

**தமிழ்கூறும்நல்லுலகத்து**

**(சிறப்புப்பாயிரம்)**

இளம்பூரணரும்நச்சினார்க்கினியரும்எல்லைகுறித்துக்கூறுகையில்முறையே,

**மங்கலத்திசையாகலின்வடக்குமுன்கூறப்பட்டது. கடல்கொள்வதன்முன்புபிறநாடும்உண்மையின், தெற்கும்எல்லைகூறப்பட்டது. கிழக்கும்மேற்கும்பிறநாடுஇன்மையின்கூறப்படாவாயின. பிறஇரண்டெல்லைகூறாதுஇம்மலையும்யாறுங்கூறியது, அவைதீர்த்தம்ஆகலானும்கேடிலவாதலானும்எல்லாரானும்அறியப்படுதலானும்என்பது. இவைஅகப்பாட்டெல்லை.**

என்றும்,

**இனிமங்கலமரபிற்காரியம்செய்வார்வடக்கும்கிழக்கும்நோக்கியும்சிந்தித்தும்நற்கருமங்கள்செய்வாராதலின்மங்கலமாகியவடதிசையைமுற்கூறினார், இந்நூல்நின்றுநிலவுதல்வேண்டி. தென்புலத்தார்க்குவேண்டுவனசெய்வார்தெற்கும்மேற்கும்நோக்கியும்கருமங்கள்செய்வாராதலின்தென்திசையைப்பிற்கூறினார்.**

குமரியாற்றின்தெற்கிலும்வேங்கடமலையின்வடக்கிலும்தமிழகத்தைச்சேர்ந்தநிலப்பகுதிகள்அமைந்திருந்தனஎன்பதனைஇவ்விருவரின்உரைகளின்வழிஅறியலாம்.

ஒருசாலைமாணாக்கராகியபனம்பாரனார்என்றுரைத்தநச்சினார்க்கினியரின்கூற்றினைமையமாகக்கொண்டுஇவரால்கூறப்பட்டஎல்லைதொல்காப்பியரின்கருத்தாகவேகொள்ளலாம்.அதனால்வடவேங்கடம்என்பதுமுல்லையில்தொடங்கித்தென்குமரிநெய்தல்கடலில்முடிவடைவதாகவும்கருதலாம்.

இதனாலும்முறைவைப்பில்இத்தகையஅமைப்புமுறைமேற்கொள்ளப்பட்டுள்ளது.

உரையாசிரியர்கள்தம்காலத்திற்குஏற்றமாற்றம்குறித்துப்பதிவுசெய்திருப்பதைஅறியலாம்.

ஆனால்அதற்கானதக்ககாரணம்கூறப்படவில்லைஏனெனில்தமிழகத்தில்நிலப்பரப்பும்அதில்இயங்கியபுலவர்களின்கருத்துநிலைகளும்நிலையற்றதாகஇருந்ததேகாரணம்.

புலவர்களும்தத்தம்மரபுநிலையில்கருத்துக்களைஅமைத்திருப்பதனைஅறியலாம்.

**முல்லைமுதலியபெயர்கள்அந்தந்தநிலப்பகுதிகளில்காணப்பெறும்முல்லை, குறிஞ்சி, மருதம், நெய்தல்என்றமலர்களின்பெயர்களால்வழங்கப்படுவனஎன்றும், நாளடைவில்அவற்றில்வழங்கும்ஒழுக்கத்திற்கும்அப்பெயர்களேவழங்கலாயினஎன்றும்கருதுவர்இளம்பூரணர். ஆனால், நச்சினார்கினியர்முதலில்ஒழுக்கத்திற்கேஅப்பெயர்கள்அமைந்தனஎன்றுகூறுவர்.**

**(அகத்திணைக்கொள்கைகள், ப.9)**

தொல்காப்பியர்முதற்பொருள்,கருப்பொருள்,உரிப்பொருள்என்றநிலையில்உரைப்பதனைஅடியொற்றிஇளம்பூரணர்கூறியிருப்பதற்குமறுதலையாகஒழுக்கமாகியஉரிப்பொருளினைமையமிட்டுக்கருப்பொருள்அமைந்ததாகக்கூறிவேறுபடுகிறார்.

உரையில்முதற்பொருளில்முதன்மைபெறும்நிலப்பகுதியின்பெயர்களுக்குவிளக்கம்தரும்போதுகுறிப்பிட்டநிலத்தில்தோன்றும்மலர்களின்பெயரால்நிலத்திற்கும்பின்பேஒழுக்கமானதுஎன்றும்நச்சினார்க்கினியர்ஒழுக்கத்தினைமுதன்மைபடுத்துவதற்கானகாரணம்அறத்தினைமுதலில்கொண்டேதன்உரையினைவடிவமைத்திருப்பதனைஅறியலாம்.

**முப்பொருளின்இன்றியமையாமை**

அகத்திணைமரபடிப்படையில்உள்ளஏழுதிணைகளில்கைக்கிளைமற்றும்பெருந்திணைதவிர்த்தநடுவண்ஐந்திணைக்கும்தனித்தொருஒழுகலாறுகளைக்கொண்டுள்ளது. இதனை,

**கைக்கிளைமுதலாகப்பெருந்திணைஈறாக, அகம்எழுபிரிவினதுஅவற்றுள்கைக்கிளை, பெருந்திணைஎன்பனதமக்கெனநிலம்இல்லாதனசார்பெழுத்துபோல்வன. எனவேமுல்லைமுதலானநிலங்களின்மேல்அவைநிகழும். நிகழவே, அவற்றிற்கெனக்கருப்பொருள்அடிப்படைவேண்டியதாயிற்று. இவ்வெழுதிணையும்முப்பொருளைச்சார்ந்துஇயங்கும்.**

**(அற்றைநாட்காதலும்வீரமும், ப.98)**

க.ப.அறவாணன்அவர்களின்கூற்றின்மூலம்அறியலாம்.

தொல்காப்பியர்முப்பொருள்பற்றிக்கூறும்நூற்பாவில்பின்வருமாறுகூறுகிறார்.

**முதல்கருஉரிப்பொருள்என்றமூன்றே**
**நுவலுங்காலைமுறைசிறந்தனவே**
**பாடலுள்பயின்றவைநாடுங்காலை**

**(அக - 03)**

இங்குப்பாடலுள்பாடலுள்பயின்றவைநாடுங்காலைஎன்பதற்குஇளம்பூரணர்மற்றும்நச்சினார்க்கினியர்முறையேபின்வருமாறுஉரைக்கின்றனர்.

**இச்சூத்திரத்துள்பாடலுட்பயின்றபொருள்மூன்றுஎனஓதிஅவற்றுள்உரிப்பொருள்எனஒன்றைஓதினமையால்புறப்பொருளும்உரிப்பொருளாகியவாறுகண்டுகொள்க.**
**இங்ஙனம்பாடலுட்பயின்றபொருள்மூன்றெனவே,**
**இம்மூன்றும்புறத்திணைக்கும்உரியவென்பதும்பெறுதும், அதுபுறத்திணைச்சூத்திரங்களுள், "வெட்சிதானேகுறிஞ்சியதுபுறனே' (56) என்பனமுதலியவற்றாற்கூறுப.**

ஆனால்பிற்காலஉரையாசிரியர்களானபாராதியாரும்ஆ.சிவலிங்கனாரும்நுவலுங்காலைஎன்பதனால்இது அகப்பொருட்செய்யுளுக்கேஉரியதுஎன்றும்புறப்பொருள்செய்யுள்களுக்குத்திணைமயக்கம்மற்றும்பெயர்சுட்டிகூறும்தலைமக்களையுடையபுறத்திணைக்குஉரியதில்லைஎன்றும்மறுத்துரைக்கின்றனர்.

அதனால்முப்பொருள்களைஉரையாசிரியர்கள்வலிந்துகூறுவதன்காரணம்கி.பி. 9நூற்றாண்டில்நிலைபெற்றபுறப்பொருள்வெண்பாமாலையின்தாக்கமே.

ஏனெனில்அந்நூலில்தான்முதலில்தொல்காப்பியர்குறித்தஅகத்திணையானகைக்கிளைமற்றும்பெருந்திணையினைப்புறத்திணையாகஏற்கபட்டது.

இவ்வாறேபுறத்திணையாகக்கூறப்பட்டஏழுதிணையுடன்இணைத்துவழக்கப்பட்டதனையும்கருத்தில்கொள்ளதக்கது.

இதனால்உரையாசிரியர்களும்அகத்திணைக்கூறுகளைப்புறத்திணையுடன்வலிந்துஎடுத்துரைப்பதனைக் காணலாம்.

இவையன்றித்தொல்காப்பியச்செய்யுளியலில்யாப்புஎன்னும்செய்யுள்உறுப்புகுறித்துக்கூறுகையில்அதன் இலக்கியவகையாகப்பாட்டுஎன்றுகுறிப்பிட்டுள்ளதையும்,முப்பொருள்குறித்துரைக்கும்போதும்பாடல்என்பதனைக்காணலாம்.

இக்காரணத்தினால்முப்பொருள்குறிப்பிட்டுஅகப்பாடல்களைஉணர்த்தாமல்பொதுநிலையில்புறத்திற்கும் சேர்த்தேகையாண்டதாகவும்கொள்ளலாம்.எனவே,பாடல்இயற்றும்புலவர்கள்உலகியல்பொருள்களினைக்கையாண்டமுறையினைஇதன்வழிஅறியலாம். வ.சுப. மாணிக்கம் அவர்கள்,

**பாட்டென்பதுஇன்னின்னவாறுஅமையவேண்டும்என்றுதொல்காப்பியம்முறைவகுக்கின்றது.**
**அம்முறைப்படிஅமைந்தபாட்டில்கருத்துச்செறிவிருக்கும்;இயற்கைவனப்புஇருக்கும்;**
**பொருளாழம்இருக்கும்.**

**(தொல்காப்பியப்புதுமை, ப.14)**

என்றுஉரைக்கும்கருத்தானதுமுப்பொருளின்இன்றியமையாததேவையினைவெளிப்படுத்துகிறது. உரையாசிரியர்களானஇளம்பூரணரும்,நச்சினார்க்கினியரும்சங்கஇலக்கியங்களிலும், கீழ்கணக்குஇலக்கியங்களிலும்புலமைவாய்ந்தவர்கள்என்பதுஅவர்களால்கையாளப்பட்டுள்ளமேற்கோள்களின்வழிஅறியலாம்.

ஒருபாடலில்முப்பொருளும்இடம்பெறுமாயின்உரையாசிரியர்கள்சிறப்புடையதாகக்கருதுகின்றனர். அதனை,

**மூன்றுவகைப்பொருள்களும்ஒருபாடலுள்அமையப்பாடப்பெறுமாயின்அதுபொருட்சிறப்புடன்விளக்கமுற்றுத்திகழும்.**

**(தொல்காப்பியம்காட்டும்வாழ்க்கை, ப.17)**

என்றுகூறியந.சுப்புரெட்டியார்அவர்களின்இக்கருத்தும்உரையாளர்களின்சிந்தனையினைவெளிப்படுத்தும்முறையில்அமைகின்றது.

முதற்பொருளானநிலம்,காலம்என்றஇரண்டின்அடிப்படையில்அந்தந்தத்திணைக்குரியதெய்வம்முதலாக யாழின்பகுதியோடுஈறாகவரையறுக்கப்பட்டவைகளேகருப்பொருள்கள்எனப்பட்டது.மேலும்,

**முதற்பொருளிலிருந்துதோன்றுவதுகருப்பொருள். அஃதுஇடத்திலும்காலத்திலும்தோன்றும். (அகத்திணைக்கொள்கைகள், ப.12)**

இவ்விரண்டின்அடிப்படையில்தோன்றுவதேஉரிப்பொருள். அதனால்தான்திணைக்குரியபகுப்பில்சிறந்துவிளங்கின்றது.

**உரிப்பொருளாவதுமக்கட்குஉரியபொருள்.உரிப்பொருள்மக்கள்வாழ்க்கையையொட்டிஇருக்கும்; அவர்கள்வாழும்வாழ்க்கைநெறியேஒழுக்கமேஉரிப்பொருள்என்றுகூறினும்தவறாகாது.**

**(அகத்திணைக்கொள்கைகள், ப.12)**

மேற்கூறியந.சுப்புரெட்டியாரின்விளக்கம்முப்பொருளின்தொடர்ச்சியினைக்கூறுகின்றார். உரிப்பொருள்இல்லாததிணைகளாகக்கூறப்பட்டகைக்கிளை,பெருந்திணை,பாலைஇம்மூன்றும்மற்றநான்குநிலங்களிலும்வரும்என்றுஉரைப்பதன்வழிஉரிப்பொருளின்அடிப்படைத்தேவையினைஉணரலாம். இதனைவலியுறுத்தும்வகையில்வ.சுபமாணிக்கம்அவர்கள்பின்வருமாறுகூறுகிறார்.

**வாழும்வாழ்க்கைநெறியை, ஒழுக்கத்தைக்குறிப்பதேஉரிப்பொருளாகும். நம்பிறப்போடுஒட்டியது, உலகப்பிறப்பைஅருளுவது, யாண்டும்பரந்தது, உணர்ச்சியுள்வலியது, ஐம்புலவின்பமும்ஒருங்குதருவது, எண்ணம், சொல், செயலெல்லாம்இனிப்பதுஎது? காதல், காதல், காதல்இக்காதலேஅகத்திணைஇலக்கியத்தின்பாடற்பொருளாம். (தமிழ்க்காதல், ப.97)**

இலக்கியத்திற்கும்இலக்கணம்உரைக்குத்தொல்காப்பியம்முப்பொருளின்அமைப்பினையும்இன்றியமை யாததேவையினைஎடுத்துரைக்கின்றது.

**முப்பொருளின்தேடலின்தேவை**

இளம்பூரணரைக்காட்டிலும்முப்பொருள்குறித்ததேடல்நச்சினார்க்கினியரிடம்மிகுந்துஇருந்ததைஅவரின் மேற்கோள்பொருத்தப்பாடுகள்வெளிப்படுத்துகிறது.காரணம்இவரின்உரைகள்தொல்காப்பியம், பத்துப்பாட்டு, கலித்தொகை, குறுந்தொகை (20), சீவகசிந்தாமணிஆகியநூல்களுக்குஉரைஎழுதியிருப்பதாகவெண்பாபாடல்குறிப்பிடுகிறது.

**பாரத்தொல்காப்பியமும்பத்துப்பாட்டுங்கலியும்ஆரக்குறுந்தொகையுள்ஐந்நான்கும் - சாரத்திருத்தகுமாமுனிசெய்சிந்தாமணியும்விருத்திநச்சினார்க்கினியமே.**

இவையன்றி 82 அரும்பெரும்நூல்களைக்கற்றுத்தேர்ந்துஅவற்றிலிருந்துபலமேற்கோள்களைஎடுத்தாண்டுள்ளார். அந்தவகையில், முதற்பொருளில்இடம்பெறும்நிலத்தினைவரையறுக்கும்போதுமேற்கொள்ளப்படும்முறையினைக்கூறும்வகையில்ஐங்குறுநூற்றின்(183) பாடலில்பொருத்திஉரைக்கிறார். இதில்நான்குநிலத்தின்பெயரும்கூறிநெய்தல்நிலத்தலைவன்என்றுகூறுவதனால்இப்பாடல்நெய்தல்திணையாயிற்று. முதலும்கருவும்வந்துஉரிப்பொருளாற்சிறப்பெய்திமுடிந்ததுஎன்றநிலையில்ஐந்து (அகநானூறு) பாடல்களுக்குப்பொருந்தபாடுகூறியுள்ளார்.முதலின்றிக்கருவும்உரிப்பொருளும்பெறுவனவும்,முதலுங்கருவுமின்றிஉரிப்பொருளேபெறுவனவும்,உரிப்பொருளொன்றுபெறுவனவும்எனவகைப்படுத்திக்கூறுகிறார்.

**“உரிப்பொருளின்றேற்பொருட்பயமின்றென்பதுபெற்றாம்.**
**இதனானேமுதல்கருவுரிப்பொருள்கொண்டேவருவதுதிணையாயிற்று.**
**இவைபாடலுட்பயின்றவழக்கேஇலக்கணமாதலின்இயற்கையாம்அல்லாதனசிறுபான்மைவழக்கினைச்செயற்கையெனமேற்பகுப்பர்”.**

இவர்தம்உரையில்உலகியல், புனைந்துரைஎன்பததோடுஒப்பிட்டுவிளக்கம்கூறுகிறார். இவ்விருசொற்களையும்அகப்பொருள்ஆசிரியர்கூறியிருப்பதனைஅறியலாம். ஆனால்அவரால்உரைக்கப்படவில்லைஎன்பதற்குத்தொல்லியல்என்றசொல்லின்வழியேஅறியமுடிகிறது. இருப்பினும்புனைந்த, புனைந்துஎன்றசொற்களைச்செய்யுளியலில்தொல்காப்பியர் (236,239) எடுத்தாளுவதும்,உலகியல்என்றசொல்லினைக்களவியல்உரையாசிரியரும்கூறுகின்றனர். இதன்மூலமாகப்புனைந்துரைஎன்றசொல்லினைநாடகவழக்குஎன்பதற்குப்பதிலீடாகக்கையாண்டுஇருப்பதைக்கணலாம்.ஆகவேஅகப்பொருள்விளக்கத்தினைஅடிப்படையாகக்கொண்டேமுப்பொருளுக்குபொரு

ள்உரைத்திருக்கிறார்என்பதனைஉலகியல், புனைந்துரைஎன்றசொல்லாடல்வழியாகஅறியமுடிகிறது. இதனை,

**“நாடகவழக்கினும்உலகியல்வழக்கினும்**

**பாடல்சான்றபுலனெறிவழக்கம்” (அக 53)**

என்றதொல்காப்பியரின்கூற்றின்வழியும்,

**“அதுவே,**

**புனைந்துரைஉலகியல்எனுந்திறம்இரண்டினும்**

**தொல்லியல்வழாமல்சொல்லப்படுமே” (அகப்பொருள் 2)**

என்றநாற்கவிராசநம்பியின்கூற்றினைஅடியொற்றிஇவரின்உரைஅமைந்திருப்பதினைஅறியலாம். இத்தகையசூழலில்தான்முப்பொருள்களின்தேடல்குறித்தசிக்கல்எழுகிறது. ஏனெனில்தொல்காப்பியர்கூறும்நிலத்தின்பெயர்கள்முறையேமுல்லை, குறிஞ்சி,மருதம்,நெய்தல்எனஅமையஅகப்பொருள்விளக்கத்தில்குறிஞ்சி,பாலை,முல்லை,மருதம்,நெய்தல் எனஅமைந்துள்ளதைக்காணலாம். ஆயினும்தொல்காப்பியத்திலேஉரிப்பொருள்கூறும்இடத்தில்முல்லைத்திணையினைமுதலில்கூறாதுகுறிஞ்சித்திணையினைமுதலில்கூறிஒழுக்கத்திற்கானநிலையினைக்கூறுவதன்மூலமாகவும்இருநூல்களிலும்முதற்பொருளானநிலம்குறித்ததெளிவின்மைபுலப்படுவதைஅறியலாம். இவையன்றிக்கருப்பொருள்குறித்துத்தொல்காப்பியம்எவற்றையெல்லாம்குறிக்கலாம்என்பதற்கானவகைமையினைமட்டுமேகூறுகிறது. ஆனால்அகப்பொருள்விளக்கத்தில்ஒவ்வொருநிலத்திற்கும்குறிப்பாகஅமைந்தவற்றைப்பட்டியலிடுகின்றன. ஆயர்என்பதுமுல்லைநிலமக்களுக்குத்திணைப்பெயராகும். அதுவேபோல்வேட்டுவர்என்பதும்முல்லைநிலமக்கட்பெயரென்றுஇளம்பூரணரும்குறிஞ்சிநிலமக்கட்பெயரென்றுநச்சினார்க்கினியரும்கூறுவர். இவருள்இளம்பூரணர்கூற்றுப்பொருட்சிறப்புடையதுஎன்றுரைத்தபாரதியார்கருத்துநோக்கதக்கது. ஆகவேதொல்காப்பியர்சுட்டியமுப்பொருள்களைமாறியகாலகட்டத்தினால்இடைக்காலமரபுகளுக்கும்ஏற்பவும்கிடைத்தமேற்கோள்களுக்கும்ஏற்பவும்மாற்றம்அடைந்திருப்பதைஅறியமுடிகிறது.

**முடிவுரை**

இதுகாறும், தொல்காப்பியஉரையாசிரியர்களின்வழிமுப்பொருள்களின்தேவைகளும்தேடல்களும்சார்ந்தகருத்துக்களைஇவ்வாய்வில்எடுத்துக்காட்டப்பட்டுள்ளன. முப்பொருள்களானமுதற்பொருள், கருப்பொருள், உரிப்பொருள்ஆகியவற்றில்இடம்பெற்றுள்ளஉரையாசிரியர்களின்முரண்பாடுகளையும்முறைவைப்புக

*இந்த கட்டுரையில் இருக்கின்ற கருத்துகள் குறித்து ஏதேனும் எதிருகாலத்தில் சிக்கல் இருந்தால் அதற்கு கட்டுரையாளரே பொறுப்பு ஆவார்*

© 2026, IRJTSR 

ளையும்அறியமுடிகிறது.

தொல்காப்பியத்தின்பின்னும்உரையாசிரியர்களுக்குமுன்னும்எழுந்தபொருளிலக்கணநூல்களின்தாக்கத்தினால்முப்பொருள்கள்குறித்தகருத்துவேறுபாடுகளையும்அதன்தேவைகளும்மாற்றத்தின்தேடல்களும்இக்கட்டுரையின்வழிஆராயபட்டுள்ளன.

## துணைநூற்பட்டியல்

[1] அடிகளாசிரியர், தொல்காப்பியம்பொருளதிகாரம்இளம்பூரணர்உரை (செய்யுளியல்நீங்கலாக). தமிழ்ப்பல்கலைக்கழகம், தஞ்சாவூர், 2008.

[2]சிவலிங்கனார்.ஆ, தொல்காப்பியம்பொருளதிகாரம்அகத்திணையியல்உரைவளம், உலகத்தமிழாராய்ச்சிநிறுவனம், 2015.

[3] அறவாணன், க.ப. அற்றைநாட்காதலும்வீரமும். பாரிநிலையம், சென்னை, 1978.

[4] சுப்புரெட்டியார், ந. டாக்டர். அகத்திணைக்கொள்கைகள். பாரிநிலையம்,சென்னை, 1981.

[5] சுப்புரெட்டியார், ந. டாக்டர். தொல்காப்பியம்காட்டும்வாழ்க்கை. பழனியப்பாபிரதர்ஸ், சென்னை,2002.

[6] மாணிக்கம், வ.சுப. தொல்காப்பியப்புதுமை. செல்விபதிப்பகம், காரைக்குடி, 1958.

[7] மாணிக்கம், வ.சுப. தமிழ்க்காதல். மெய்யப்பன்பதிப்பகம், சிதம்பரம், 2005

*இந்த கட்டுரையில் இருக்கின்ற கருத்துகள் குறித்து ஏதேனும் எதிருகாலத்தில் சிக்கல் இருந்தால் அதற்கு கட்டுரையாளரே பொறுப்பு ஆவார்*

© 2026, IRJTSR